**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி**
**முன்னிலை: திரு.A.கண்ணன், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ), ஆண்டிபட்டி**
**2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A No.3/2024**
**in**
**O.S. No.98/2019**

1) ரெங்கராஜ்
2) தொத்தன்
3) வேலுச்சாமி
4) தங்கபாண்டி (இறப்பு) (நீக்கரவு செய்யப்பட்டார்)
5) பாண்டி
6) சின்னமாரி
7) முருகன் ... மனுதாரர்கள் /வாதிகள்

– எதிர் –

1) சந்திரா
2) அன்னக்கொடி
3) சௌந்திரராஜன்
4) சாமிநாதன் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது, 27.02.2024 ம்தேதி I.A.No.3/2024 ஆக இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 வது எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.S.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பால்பாண்டி அவர்கள் முன்னிலையாகியும், இருந்த நிலையில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று 04.10.2024 ம்தேதியன்று இந்நீதிமன்றம் வழங்கலான...

**உத்தரவு**

1) மனுதார் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க உத்தரவிடக் கோரி சிபிசி கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151 ன்கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)மனுவின் சுருக்கம் –**

மனுதாரர் அசல் வழக்கின் 7 ஆம் வாதி ஆவார். அசல் வழக்கை திம்மரசநாயக்கனூர் கிராமத்தின் பொதுமக்கள் அனைவரின் சார்பாகவும் பிரதிநிதித்துவ அடிப்படையில் பிராது சொத்து ஊர் பொதுமக்களின் பொது பயன்பாட்டில் உள்ளதை எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்ய எத்தனிக்க கூடாது என்று நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள், மனுதாரர்கள் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்குமாறு மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதார்கள் தரப்பில் அசல் வழக்கு விசாரணைக்கு வந்த பின்பு வழக்கறிஞரிடம் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்களை பற்றி கேட்டறிந்த போது ஆவணங்கள் அனைத்தும் ரெங்கராஜ் அவர்கள் கைவசம் இருந்ததை காலகெடுவிற்குள் தாக்கல் செய்யாமல் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்காது போனால் பெருத்த கஷ்ட நஷ்ட ஏற்படும். எனவே காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் –**

மனுதாரர்களின் மனுவில் உண்மைக்குபுறம்பான பொய்யான சங்கதிகளை மனுதாரர்கள் காட்டியிருப்பதால் மனுதாரர்கள் மனுவும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டும். மனுவில் கண்ட சங்கதிகளை மனுதாரர்களே நிரூபணம் செய்யக்கடமைப்பட்டவர். 1 ஆவது பத்தியில் மனுதாரர் அசல் வழக்கின் 7 ஆம் வாதி என்று சொல்வதில் இதர வாதிகளுக்காகவும் மனுவை தாக்கல் செய்திருப்பதாக சொல்வதை 1 ஆம் எதிர்மனுதாரர் ஆட்சேபனை செய்கிறார். அசல் வழக்கு பிராதில் பரிகார பாராவில் (அ) பரிகாரமாக கேட்கப்பட்டுள்ளதும், திம்மரசநாயக்கனூர் கிராம மக்களுக்கு பொது பாத்தியப்பட்ட பிராது சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ, முகவர்களோ, அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்யகூடாது என்று நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க கோரியிருப்பதில் வழக்குச் சொத்தானதும், திம்மரசநாயக்கனூர் கிராம நத்தம் புல எண்.2555/2 செண்டு 8 மற்றும் 2566/7 செண்டு 5ம் ஆக மொத்தம் 13 செண்டு காலியிடம் என சொத்து விபரத்தில்

காட்டியிருப்பதில் மேற்படி சொத்து வாதிகளின் கூற்றுபடி திம்மரசநாயக்கனுார் கிராம மக்களுக்கு பொது பாத்தியப்பட்டதென சொல்வதற்கான ஆவணங்கள் ஏதுவும் தற்சமயம் மனுவின்படி தாக்கல் செய்யாமல் 1ஆம் எதிர்மனுதாரர் ஆண்டிபட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு ஒ.எஸ்.எண்.88/2024—ன்படி ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் இதர ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்திருப்பதில் ஏற்கனவே மனுதாரர்கள் தாக்கல் செய்த வழக்கில் ஆண்டிபட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு ஒ.எஸ்.எண்.88/2024—ன்படி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக எந்த விதமான விவரங்கள், சொல்லப்படாத நிலையில் தற்போது எதனடிப்படையில் அல்லது என்ன காரணத்திற்காக அல்லது எதை பொறுத்து நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யப்படுகிறது என்பதற்காக விபரங்கள் தெரிவிக்கப்படாத காரணத்தினால் மனுதாரர்கள் மனுவும் செய்யப்படவேண்டும். அபிடவிட்டு தாக்கல் செய்துள்ள நபருக்கு எந்த வகையிலும் பிராது சொத்து சம்பந்தமில்லை. அதேபோல, ஆண்டிபட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு ஒ.எஸ்.எண்.88/2024—ன்படி தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு சம்பந்தமில்லாத நபர் ஆவார். 2ஆம் எதிர்மனுதாரரின் பினாமிகளாக மனுதாரர்கள் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். விளம்புகை பரிகாரம் கேட்கப்படவில்லை என்பதால் அசல் வழக்கும் தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகவுள்ளது. மேலும் விளம்புகை பரிகாரம் கேட்கபடாதநிலையில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமற்றதாகும். காலதாமத்துடன் மனு தாக்கல் செய்திருப்பதால் மனுதாரர்கள் மனுவும் முதல்நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும். எனவே மனுவை எதிர்மனுதார்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **2ம் எதிர்மனுதார்ரின் எதிருரையின் சுருக்கம் –**

மனுதாரர்கள் அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா இடைமனுவை தாக்கல் செய்துள்ளார். தாவா இடைமனுவில் என்ன காரணங்களுக்காக அசல் வழக்கில் கூடுதல்

ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டும் என்றோ அல்லது அ.வ.எண்.88/2024 வழக்கு ஆவணங்கள் இந்த அசல் வழக்கிற்கு எந்த வகையில் வாதிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்ற எந்தவொரு விபரமோ, காரணங்களோ இடைமனுவில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. தாவா வழக்கில் வாதிகள் நிரந்தர நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அ.வ.எண்.88/2024 வழக்கில் விளம்புகை மற்றும் சுவாதீன மீட்டளிப்பு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வழக்குகளிலும் வெவ்வேறு பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு வழக்குகளின் வழக்கு மூலங்களும் வெவ்வேறானவை. எனவே கூடுதல் ஆவணங்கள் எந்த வகையிலும் வாதிகளுக்கு தாவா வழக்கில் கூடுதல் பயனளிக்கும் போன்ற விபரங்களும், காரணங்களும் தாவா இடைமனுவில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பிராது சொத்திற்கும் 2,3,4 ஆம் பிரதிவாதிகளால் அனுபவித்து வரும் சொத்துக்களுக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை. தாவா சொத்தை 2ம் பிரதிவாதியின் தந்தை ரெங்கசாமிநாயுடு, ஒரு முத்தம்மாவிடம் இருந்து கடந்த 21.02.1977 ஆம் தேதி கிரையம் பெற்று, அதன்பின்பு 2ம் பிரதிவாதி வாரிசு முறையில் அடைந்து வீடுகட்டி குடியிருந்து கடந்த 1990ம் ஆண்டு முதல் வரி செலுத்தி குடியிருந்து வருகிறார். காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களில் 8, 9, 10 ஆவணங்கள் அ.வ.எண்.88/2004—ன் வழக்கு ஆவணங்கள் என்றும், மேற்கண்ட ஆவணங்கள் நீதிமன்ற ஆணையர் அறிக்கை, வரைபடம் மற்றும் சர்வேயர் வரைபடம் என்றும், மேற்படி அறிக்கையில் சர்வே எண்.778/1—ல் திம்மரசநாயக்கனூர் கிராமத்தின் மொத்த சொத்தையும் குறிக்கும்படியாக உள்ளது. ஆக்கிரமிப்பைக் கண்டறிய முடியவில்லை என நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின்பு தான், மீண்டும் வாதி தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய எத்தனித்து வருவதற்கு முயற்சி செய்து வருவதாக முன்னுக்குப்பின் முரணாககூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த கூடுதல் ஆவணங்கள் அனைத்து வகையிலும் வாதிகளுக்கு தாவா அசல் வழக்கைப் பொறுத்து எதிராகவே உள்ளது. எனவே அசல் வழக்கில் கூடுதல் ஆவணங்களை ஏற்க வேண்டி, மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்யும் மனுவை 2 முதல்

4 வரையிலான எதிர்மனுதார்களின் அதிக செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) **2 முதல் 4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் –**

மனுதாரர்கள் தரப்பில் தற்போது அசல் வழக்கில் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் தற்போது கூடுதல் ஆவணங்களைக் ஏற்க வேண்டி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இடைமனுவானது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. மனுதாரர்கள் அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள தாவா இடைமனுவானது விசாரணைக்கு உகந்தல்ல. தாவா சொத்து குறித்து ஏற்கனவே இரு தரப்பினர்களுக்கிடையே அ.வ.எண்.88/2024–ல் வாதியால் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றும் வழக்கில் தாவா சொத்திலுள்ள பிரச்சனைக்களுக்கு தீர்வு காணும் பொருட்டு நீதிமன்றம் ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அதனடிப்படையில் இ.ம.எண்.8/2015–ல் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்து குறித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் அறிக்கையை எதற்காக இந்த அசல் வழக்கில் வாதிகள் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும். அதனால் வாதிக்கு அசல் வழக்கில் என்ன பலன் உள்ளது போன்ற எந்தவொரு விபரமும் தெளிவாகக் குறிப்பிட்டு இடைமனு தாக்கல் செய்யாமல் பெயரளவிற்கு தாக்கல் செய்துள்ள மனுவை உடனடியாக விசாரணை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஒன்றாகும். தற்போது மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் தாவா அசல் வழக்கிற்க்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை. இந்த ஆவணங்கள் அசல் வழக்கில் வாதிக்கு எந்த வகையில் உதவிகரமாக இருக்கும் என்ற விபரம் ஏதும் இடைமனுவில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆதலால் இம்மனு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. எனவே அசல் வழக்கில் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ள இடைமனுவை எதிர்மனுதாரர்களின் அதிக செலவு

தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத் தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7) இருதரப்பிலும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பிலும் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதார் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை எடுத்துரைத்து மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார். எதிர்மனுதார்கள் தரப்பில் வாதிட்டுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் எதிருரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை எடுத்துரைத்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

9) அசல் வழக்கானது மனுதார்களால் எதிர்மனுதார்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதார்கள் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்கக் கோரியும் மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் மனுவில் கண்ட ஆவணங்களும் மனுதார்கள் கைவசம் எப்படி கிடைக்கப்பெற்றது என்று குறிப்பிடப்படவில்லை என்றும் ஆவணங்களும் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றும் எனவே மனுதார் கோரும் பரிகாரமும் மனுதார்க்கு கிடைக்கக்கூடியதாக இல்லை என்றும் வாதிட்டுள்ளார். மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக் கொண்டு ஆவணங்களை குறியீடு செய்யும் பொழுது அதன் உண்மைத் தன்மைகள் குறித்தும் செல்லும் தன்மைகள் குறித்தும் குறுக்கு விசாரணை செய்வதற்கும் ஆட்சேபணை செய்வதற்கும் எதிர்மனுதார்களுக்கும் வாய்ப்பும் உள்ளது. எனவே மனுதார்

தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்யப்படுவதாலேயே நிரூபிக்கப்பட்ட ஆவணங்களாகவும் இருந்துவிடப் போவதில்லை.

10) இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும் வழக்குத் தரப்பினர்களுக்கு போதிய வாய்ப்பளித்து இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ரீதியாக வழக்கை தீர்மானித்தால் மட்டுமே இருதரப்பினர்களுக்கும் மேலும் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் எழுவதையும் தடுக்கமுடியும். எதிர்மனுதார்கள் தரப்பில் சாட்சியங்களை பொறுத்து குறுக்கு விசாரணை செய்வதற்கும் வாய்ப்புகள் இருக்கிறது. மனுதார்கள் தரப்பிலும் அசல் வழக்கில் நிரந்தர உறுத்துக் பரிகாரங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கும் போதிய சாட்சியங்களையும் சான்றாவணங்களையும் தாக்கல் செய்யும் பொருட்டு வாய்ப்பளிக்க வேண்டியதும் அவசியமான ஒன்றாகும். எனவே மனுவையும் அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் நீதியின்நலன்கருதி முடிவு செய்கிறது.

**11) முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024ம் வருடம் அக்டோபர் மாதம் 04 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)A.கண்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆண்டிபட்டி,

இருதரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்– தாக்கல் இல்லை.

(ஒம்)A.கண்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆண்டிபட்டி,